**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**OS No: 114/2020**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**வா.சா.1 (கமலாத்தாள்) நாள் 13.03.2026**

குறுக்கு விசாரணை (5ம் பிரதிவாதி தரப்பில்)

எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும். தாவா சொத்தில் தான் 4ம் பிரதிவாதி குடியுள்ளார் என்றால் சரிதான். அவர் குடியிருக்கும் வீடு புது வீடாகும். அதில்லாமல் பழைய வீடு ஒன்று தாவா சொத்தில் உள்ளது. என் தாயார், நான் ஆகியோர் கலந்து ஆலோசித்து தான் தாவா தாக்கல் செய்யப்பட்டது. கவுண்டியப்ப கவுண்டர் இறந்த பின் அவரது வாரிசுகள் சின்னப்ப கவுண்டர், நாராயண கவுண்டர் மற்றும் செல்லப்ப கவுண்டர் மற்றும் அவர்கள் வாரிசுகள் சேர்ந்து பாகப்பிரிவினை வாசாஆ 1 ன்படி செய்து கொண்டனர் என்றால் சரிதான். அதில் பி செட்டியூல் சொத்து நாராயணகவுண்டருக்கும் எனது மாமா முத்துசாமிக்கும் கூட்டாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பாமடைகாடு 427/12பி புது வீடு 427/17ஜி, பழைய வீடு 427/17 டி ,கூலான்காடு 426/3,4,5,6 ஏ ,தோட்டக்காடு 444/2,5, குப்பைகுழி 454/8 என்றால் சரி. புது வீடு சிமெண்ட் சீட் போட்ட வீடு. மின் இணைப்பு 1039 மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். அது முத்துசாமி பெயரில் உள்ளது என்றால் பொதுவில் உள்ளது. பழைய வீடு ஓட்டு வீடு. என்னிடம் காண்பிக்கப்படும மின் கட்டண ரசீது **பிசாஆ 1.** புது வீடு 2500 சதுரடியில் இருக்கும் என்றால சரிதான். பழைய வீடு ஓட்டு வீடு. ஓட்டு வீட்டிற்கான மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை. மின் இணைப்பு எண் 60 என உள்ளது என்றும், அது முதததுச்சாமி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. பழைய வீடு மற்றும் புதிய வீடு இருப்பதையும் அதில் மின் இணைப்பு இருப்பதையும் வழக்கில் குறிப்பிடாமல் அதற்கு மதிப்பீடு செய்யாமலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மொத்தம் 3 கிணறுகள் உள்ளது. 3 கிணறுகள் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்ற விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றும்,அதற்கு மதிப்பீடு செய்யவில்லை என்றால்

சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 1 ல் பி செட்டியூலில் உள்ள சொத்து நாராயண கவுண்டருக்கும் அவர் மகன் முத்துசாமிக்கு பொதுவாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் நாராயண கவுண்டரின் சொத்தில் தான் பாகம் கோருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் வழக்கில் கோரியுள்ள விகிதாசார் தவறானது என்றால் சரியல்ல. நாராயண கவுண்டரின் இறப்பு மற்றும்வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாசாஆ 2 நாராயண கவுண்டா, சின்னப்ப கவுண்டர், செல்லப்ப கவுண்டர் சேர்ந்து கிரயம பெற்றுள்ளனர் என்றால் சரிதான். வாசாஆ 2 ல் மேற்படி நபர்கள் பழைய கச 21 ல் பொதுவில் 1/4 பாகம் ஏக்கர் 2.62-3/4 கிரயம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 2 ல் கண்டுள்ள சொத்து மேற்படி கிரயம் பெற்ற நபர்களுக்குள் தற்போது வரை பாகப்பிரிவினை ஏற்டபவில்லை என்றால் சரிதான். வாசாஆ 2 ல் கண்டுள்ள சொத்து விற்பனை செய்யப்படவில்லை. வாசாஆ 2 ல் கண்டுள்ள சொத்திற்கான இதர 3/4 பாகஸ்தர்கள் யார் என்று எனக்கு தெரியாது. வாசாஆ 2 ல் என் தாத்தாவுடன் கிரயம் பெற்ற நபர்களையும் இதர பாகஸ்தர்களையும் சேர்க்கவில்லை என்பதால் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாசாஆ 2 ல் கண்டுள்ள கச 21 ல் மறு நில அளவை விவரங்கள் மற்றும் அது தொடர்புடைய ஆவணங்கள் என்ன தாக்கல் செய்யப்பட்டது என என்னால் சொல்ல இயலாது என்றால் சரியல்ல. கச 21 ல் கண்டுள்ள சொத்து வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றும் அதனாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED — Digitally signed by M ASHFAQ AHAMED Date: 2026.03.13 16:23:28 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS